Judicial Form No. 53
(Sec Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | CC. No. 185 of 2016 |

PW - 3

Time 12.14 PM – 12.24 PM

| | |
|---|---|
| Name | : சிங்காரவேலன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | :xxx |
| Calling | : |
| Religion | :xxx |
| Age | : |

(Accused absent. Petition U/s 317 Crpc filed and allowed).

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 28th day of August 2025.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது பர்கூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். 2016 ல் கிருஷ்ணகிரி ஆயுதப்படையில் பணியில் இருந்தேன். 04.04.2016 ம் தேதி ஆயுதப்படை குடியிருப்பில் இருந்தேன். அன்று காலை 04.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் பார்த்திபன் என்பவரின் பல்சர் இருசக்கர வாகனத்தை அவருடைய குடியிருப்பிற்கு முன்னால் நிறுத்தி வைத்திருந்தது வாகனம் திருடு போனதாக எனக்கு தகவல் சொன்னார். அக்கம் பக்கம் தேடி பார்த்தோம் வாகனம் கிடைக்கவில்லை. இது குறித்து பார்த்திபன் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN 30 AL 5724 ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. காவல் உதவி ஆய்வாளர் பாத்திபன் எந்த தேதியில் எந்த இடத்தில் வாகனத்தை நிறுத்தி இருந்தார் என்று தெரியாது என்றால் 03.04.2016 ம் தேதி

அவருடைய குடியிருப்பு முன்பாக வாகனத்தை நிறுத்தியிருந்தார். குடியிருப்பில் காவலர்கள் மட்டுமே வசித்து வருகிறார்கள் என்றால் பொது மக்கள் பயன்படுத்தும் சாலை உள்ளே உண்டு. கண்காணிப்பு கேமரா இருந்தது என்றால் அந்த சமயத்தில் இல்லை. வாகனத்தை எடுத்து சென்றது யார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் துறையில் நானும் புகார்தாரரும் ஒன்றாக பணியாற்றுவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை

Sd/D.Saravanan,
Judicial Magistrate No.II,
Krishnagiri.

Judicial Form No. 53
(Sec Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, KRISHNAGIRI.

Calendar .. ..
Miscellaneous .. ..
Preliminary Register .. ..
Sessions .. .. } CC. No. 185 of 2016

PW - 4

Time 12.25 PM – 12.36 PM

Name : விஜயலிங்கம்
Father's Name :
Village :
Taluk :
Caste :xxx
Calling :
Religion :xxx
Age :

(Accused absent. Petition U/s 317 Crpc filed and allowed).

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 28th day of August 2025.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது மது விலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். 2016 ல் கிருஷ்ணகிரி ஆயுதப்படையில் காவலராக பணிபுரிந்து வந்தேன். ஆயுதப்படை குடியிருப்பில் குடியிருந்தேன். 04.04.2016 ம் தேதி காலை சுமார் 05.00 மணிக்கு ஒசூர் போக்குவரத்து பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பார்த்திபன் என்பவருடைய இருசக்கர வாகனம் காணவில்லை என்று சொன்னார். அந்த பல்சர் இருசக்கர வாகனத்தின் TN 30 AL 5724 ஆகும். அந்த வாகனத்தை அவருடைய குடியிருப்பிற்கு நிறுத்தியிருந்ததாக சொன்னார். இரவு நிறுத்தி வைத்திருந்தததை காலை காணவில்லை என்று சொன்னார். அங்கிருந்த நாங்கள் அக்கம் பக்கம் தேடி பார்த்தோம் கிடைக்கவில்லை. பின் 07.04.2016 ம் தேதி வண்டி காணாமல் போனது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தார். மறுநாள் 8 ம் தேதி காலை 07.00 மணிக்கு எங்கள் குடியிருப்பிற்கு முன்னால் நானும் காவலரர் புருசோத்தமனும் இருந்த போது தாலுக்கா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தை காட்டும்படி சொன்னார். நாங்கள் இடத்தை காட்டினோம். அவர்

சம்பவயிடத்தில் ஒரு வரைப்படம் வரைந்து தயார் செய்த பார்வை மகஜரில் நானும் புருசோத்தமனும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். ( **<u>பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

1. இரு சக்கர வாகனம் எந்த இடத்தில் எப்போது நிறுத்தினார் என்ற விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தை யார் திருடி சென்றார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் குடியிருப்பில் வசித்து வரும் காவல் உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். திருடுபோன நாளிலிருந்து எவ்வளவு நாட்கள் கழித்து புகார் அளிக்கப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதி கொடுத்தார் என்ற விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரரும் நானும் காவல் துறையில் ஒன்றாக பணிபுரிவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து சம்பவயிடம் வந்து போலிசார் பார்வையிட்டார்கள் என்றால் 04.04.2016 ம் தேதி காலையில் எனக்கு தகவல் தெரிந்தது போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்ட தேதி 08.04.2016.

<u>மறுவிசாரணை</u> இல்லை

Sd/D.Saravanan,
Judicial Magistrate No.II,
Krishnagiri.